IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 653 /2009
Deposition of witness for PW1

Name : ஜெயா
Husband's Name : கிருஷ்ணன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28 day of January, 2020.

Cross Examination

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நானும், 2ம் வாதி சந்திராவும் ஒரு தாய்மக்கள் என்றால் சரிதான். எனது தகப்பார் பெயர் புண்ணியகோட்டி என்றால் சரிதான். 3ம் வாதி விஜயலட்சுமி எனது உடன்பிறப்பும் அல்ல ஒரு தாய் மக்களும் அல்ல. 3ம் வாதி எனது தாயருடன் பிறந்த சகோதரியின் மகள் ஆவார். 3ம் வாதி விஜயலட்சுமியின் தகப்பனார் பெயர் கேசவரெட்டி ஆகும். கேசவரெட்டியும், புண்ணியகோட்டியும் அண்ணன் தம்பி இல்லை என்றால் சரிதான். உறவினர் ஆவார். 1, 2 வாதிகளாகிய நாங்களும், 3ம் வாதியும் ஒரேகுடும்பமாக இருந்தோம். 3ம் வாதி விஜயலட்சுமி குடும்பத்தில் நான் உரிமை எதுவும் கோரமுடியாது. விஜயலட்சுமி என்னை இவ்வழக்கில் தனது சார்பாகவும் சாட்சியமளிக்க அதிகாரம் கொடுத்த ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். இந்த விவரத்தை எனது வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 2ம் வாதி சந்திரா என்னுடன் சேர்ந்து வழக்கு நடத்திவருகிறார். என்னபரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் 5 இலக்க சொத்துக்கள் உள்ளன. அதில் ஓட்டுவீடு, மெத்தைவீடு சமயலறை, காலிமனையிடம், மாட்டுப்பட்டி ஆகியசொத்துக்களில் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல செய்துள்ளேன். சாட்சி தற்பொழுது 4 அயிட்ட சொத்துக்களைப்பொறுத்து வழக்கு தாக்கல் செய்திருப்பதாக

கூறுகிறார்.இன்றும், தாவா சொத்தில் வீடு உள்ளதா என்றால் இரண்டுஓட்டுவீடுகள் உள்ளது. நான் தாக்கல ் செய்த வழக்குரையில் சொத்து விவரத்தில் 3 இலக்க சொத்துக்களையும் காலிமனைகளாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். ஓட்டுவீடுகள் இருப்பதாக எனது வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா 1 வது அயிட்ட சொத்து 2 அயிடட சொத்திற்கு எந்த திசையில் உள்ளது என்றால் 2வது இல்ல சொத்திற்கு 3வது இலக்க சொத்து எந்த திசையில் உள்ளது என்று சாட்சியடம் கேட்டால் எனக்கு சொல்லத்தெரியாது என்று கூறுகிறார். தாவா சொத்துக்கள் அனைத்து கண்டிப்பேடு கிராமத்தில் உள்ளது. 10 வருடங்களுக்கு மேலாக நான் காந்தி நகரில் வசித்து வருகிறேன். வழக்கு சொத்து இருக்கும் கிராமத்திலிருந்து 30 வருடங்களுக்கு முன் வெளியில் வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால் தான் என்னால் வழக்கு சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. 1வது அயிட்ட சொத்துவிவரத்தில் கி/மே எவ்வளவு அடி, வடக்கு தெற்கு எவ்வளவு அடி என்று எனக்கு தெரியாது. 2வது, 3வது அயிட்ட சொத்து விவரத்தில் கி/மே எவ்வளவு அடி, வடக்கு தெற்கு எவ்வளவு அடி என்று எனக்கு தெரியாது. சாட்சி தற்பொழுது க/மே 13X15 கெஜம் என்று சாட்சி கூறுகிறார். அந்த விவரத்தை எனது வழக்குரையில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 3ம் வாதி விஜலட்சுமியின் தாயாரைப்பற்றி வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். 3ம் வாதி விஜயலட்சுமி தனலட்சுமியின் மகள் என்பததை காட்டும் ஆவணத்தை நான் வைத்துள்ளேன் தாக்கல் செய்யவில்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.